T.C: 036

012/DD/21

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

(4 × 25 = 100)

1. Translate the following into English.

இருப்பதை வைத்துக்கொண்டு மாணவர் என்னென்ன காரியங்களைச் செய்தல்கூடும் என்பதையும் நாட்டுக்குரிய சேவையிலே நாம் இன்னும் அதிகமாக என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதையும் கவனிப்போம். இப்படி கவனிக்கும்போது, தங்கள் உள்ளத்தை ஆராய்ந்து சொந்த நடத்தையில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றே எனக்கு தோன்றுகிறது. மாணவர்கள் பெரிய பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்க்கின்றவர்களுக்கும் இதே கருத்துதான் உண்டாகிறது. சொந்த வாழ்க்கையைத் தூய்மையாக்குவதொன்றே திறமையான கல்வி முறையை அமைப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். நான் ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான மாணவர்களோடு எனக்கு அடிக்கடி கடிதப் போக்குவரத்து இருந்து வருகிறது. இடைவிடாது எனக்கு வந்துகொண்டிருக்கும் இந்தக் கடிதங்களில் அவர்கள் தங்கள் உள்ளத்துணர்ச்சிகளை அப்படியே காட்டுகிறார்கள்; என்னிடம் தங்களுடைய அந்தரங்கத்தையெல்லாம் சொல்லுகிறார்கள். இவை யாவற்றிலிருந்தும் மாணவர்களிடம் அமைய வேண்டிய இயல்புகள் இன்னும் இருக்கின்றன என்பதையே நான் தெளிவாகக் காண்கிறேன். நான் சொல்லுவதை நீங்களனைவரும் தெளிவாக உணருகிறீர்களென்றே எண்ணுகிறேன். நமது மொழிகளிலே மாணவன் என்ற சொல்லைக் குறிப்பதற்கு இன்னொரு அழகான சொல் இருக்கிறது. "பிரமசாரி" என்பது அந்தச் சொல். வித்யார்த்தி என்ற சொல் நாமாக ஏற்படுத்திக்கொண்ட ஒரு சொல். பிரமசாரி என்ற சொல்லுக்கு இந்தச் சொல் இணையாகாது. பிரமசாரி என்ற சொல்லின் பொருள் உங்களுக்குத் தெரிந்து இருக்குமென நம்புகிறேன். பிரமத்தைத் தேடுபவன். அதாவது குறுகிய காலத்தில் கடவுள் நிலைக்கு மிக அருகிலே செல்லத்தக்க முறையில் நடந்து கொள்ளுபவன் என்று பொருள். உலகத்திலுள்ள பெரிய மதங்கள் அனைத்தும் தமக்குள் எவ்வளவுதான் மாறுபட்டபோதிலும், இந்த அடிப்படையான ஒரு விஷயத்தில் மட்டும் முற்றிலும் அவை ஒரே கருத்துடையனவாய் இருக்கின்றன. அதாவது இறைவனுடைய மகத்தான மாசுமறுவற்ற சிங்காதனத்தின் முன் அதாவது கடவுள் சன்னிதானத்திலே தூய உள்ளமில்லாத எந்த ஆணும் பெண்ணும் அணுக முடியாது. உள்ளத்தூய்மையைப் பூரணமாகப் பயன்படுத்தி, அதை வளர்ப்பதற்குக் கல்வி உதவியாய் இருக்க வேண்டும். அதற்கு உதவியாயிராத கல்வி பயனுடையதல்ல. எவ்வளவுதான் வேதங்களைப் பாராயணம் பண்ணியிருந்தாலும், சமஸ்கிருதம், லத்தீன், கிரீக் மொழிகளை எவ்வளவுதான் பிழையறக் கற்றாலும் அவற்றால் யாதொரு பயனுமில்லை. அறிவு படைத்ததன் முடிவான நோக்கம் ஒழுக்கத்தை வளர்ப்பதேயாகும்.

[Turn over

2. Translate the following into English.

என்னுடைய தந்தை போர்பந்தரை விட்டு இராஜ்கோட்டுக்கு இராஜஸ்தானி நீதிமன்றத்தில் உறுப்பினராவதற்குச் சென்றபோது எனக்கு ஏழு வயது இருக்கலாம். அங்கு நான் ஒரு தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டேன். அந்த நாட்களையும், எனக்குப் பாடம் சொல்லித்தந்த ஆசிரியர்களைப் பற்றிய சில செய்திகளையும், பெயர்களையும் நான் நன்கு நினைவுகூர முடிகின்றது. போர்பந்தரில் இருந்ததைப் போலவே இங்கேயும் என்னுடைய படிப்பைப் பற்றி எதுவும் சிறப்பாகக் குறிப்பிட முடியவில்லை! நான் நடுத்தரமான மாணவனாகவே இருந்தேன். நான் புறநகர்ப் பள்ளிக்கு முதலில் சென்றேன். முன்னதாகவே பன்னிரண்டு வயது முடிந்திருந்தமையால் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றேன். இந்த குறுகிய காலத்தில் தன்னுடைய ஆசிரியர்களிடத்திலோ அல்லது என்னுடைய பள்ளித் தோழர்களிடத்திலோ ஒரு பொய் கூடக் கூறியதாக எனக்கு நினைவில்லை. நான் மிகவும் கூச்சமுள்ளவனாகவும், எந்தவிதமான நட்பையும் தவிர்ப்பவனாகவும் இருந்தேன். என்னுடைய புத்தகங்களும் எனது பாடங்களும் மட்டுமே என்னுடைய ஒரே துணையாக இருந்தன. பள்ளிக்கூடத்தில் மணி அடிக்கும் வரை இருப்பது, பள்ளி முடிந்தவுடன் வீட்டிற்குத் திரும்பி ஓடி வருவது! இவையே என்னுடைய ஒவ்வொரு நாள் பழக்கமாக இருந்தது. உண்மையில் நான் பள்ளி முடிந்தவுடன் வீட்டுக்கு ஓடிவிடுவேன். ஏனெனில் யாரிடமும் பேசும் பழக்கம் இல்லை. யாராவது என்னைக் கேலி செய்வார்கள் என்ற பயமும் கொண்டிருந்தேன். உயர்நிலைப் பள்ளியில் முதல் வருடத்தில் தேர்வு சமயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி ஒன்று உண்டு. திரு. கைல்ஸ் என்ற கல்வி ஆய்வாளர் பள்ளியில் ஆய்வுக்கு வந்திருந்தார். எழுத்துப் பயிற்சிக்காக ஐந்து சொற்களைக் கொடுத்திருந்தார். அவற்றில் ஒன்று 'கெட்டில்' என்பது. நான் அச்சொல்லின் எழுத்துக்களைத் தவறாக எழுதினேன். எனது ஆசிரியர் தனது காலணியின் முனையினால் எனக்குத் தூண்டுதல் செய்தார். ஆனால் நான் அவ்வாறு சொல்லித் தரப்படுவதை ஏற்கவில்லை. அவர் எனது அருகில் உள்ளவரின் எழுது பலகையிலிருந்து பார்த்து எழுதத் தூண்டினார். அது எனக்கு ஒவ்வாததாக இருந்தது. ஏனெனில் ஆசிரியர் அங்கு இருப்பதே நாங்கள் ஒருவரையொருவர் பார்த்து எழுதாமல் மேற்பார்வையிடத்தான் என்று கருதினேன். முடிவில் என்னைத்தவிர எல்லா மாணவர்களுமே ஒவ்வொரு சொல்லுக்கும் சரியான எழுத்துக்களை எழுதியிருந்தனர். நான் மட்டுமே மூடத்தனமாக இருந்துவிட்டேன். ஆசிரியர் பின்னர் வீணாக இந்த என்னுடைய மூடத்தனத்தை எனக்கு அறிவுறுத்த முயன்றார். என்னால் பார்த்து எழுதும் கலையை எப்பொழுதும் கற்றுக்கொள்ள இயலவில்லை.

எனினும் இந்த நிகழ்ச்சி என் ஆசிரியர் மேலிருந்த மரியாதையைக் கொஞ்சங்கூட குறைக்கவில்லை. நான் இயற்கையாகவே பெரியவர்கள் செய்யும் தவறினை அறிய முடியாதவனாகவே இருந்தேன்.

3. Translate the following into English.

மைய அரசுக் கல்வித் துறையின் கணக்கீட்டின்படி ஏறத்தாழ 470 இலட்சம் சிறுவர் சிறுமியர் எவ்விதக் கல்வி வாய்ப்புமின்றிக் கிடக்கின்றனர். ஆனால் தோடக்கக் கல்வியைப் பரவலாக்கத் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் இத்தொகை மிகுதியாகவே இருக்க வாய்ப்புண்டு. இன்றைய நாளுக்கும் 1993–க்கும் இடையே உள்ள காலத்தில் 263.32 இலட்சம் பேரைப் பள்ளியில் சேர்க்க வேண்டும். இவர்களில் முக்கால் பங்குத் தொகையினர், ஆந்திரம், அஸ்ஸாம், பீகார், ஜம்மு–காஷ்மீர், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் உள்ளனர். பள்ளியில் சேராதவர்களில் மூன்றில் இரண்டு பேர் பெண்கள்; (இம்மாநிலங்களை கல்வியில் பின் தங்கிய மாநிலங்கள் என்று மைய அரசு குறிப்பிடும்) பள்ளியில் சேராதவர்களில் பெரும்பாலோர் சிறுமியராக இருப்பதால், மிக வலுவான (முனைப்பான) முயற்சியைத் தொடுக்கவேண்டும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றும் (பள்ளிக்கும் கல்லூரிக்கும் பெண்கள் செல்லக்கூடாது தேவையற்றது என்றும் கருதும்) பத்தாம் பசலித்தனமான சமுதாய, பொருளாதார முட நம்பிக்கைகள் காரணமாகப் பிள்ளைகளைப் பள்ளிக்கு நாம் அனுப்பாமல் இருக்கின்ற பெற்றோரைத் தூண்டுதல் செய்ய இம்முனைப்பு உதவும்.

முறைசாராக் கல்வி மூலமே, 50% கூடுதலாகச் சேர்க்க வேண்டிய பிள்ளைகளுக்குக் கல்வியளிக்க இயலும் என மையக் கல்வி அமைச்சகம் ஒப்புக் கொள்கின்றது. பிள்ளைகளின் வீடுகளுக்கே கல்வியை எடுத்துச் செல்ல வேண்டும் (வீடுகளிலேயே கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும்) என்பது அடிக்கடி பேசப்படும் இலட்சியமாகும்.

4. Translate the following into English.

உலகம் நமக்காகப் படைக்கப் பட்டிருப்பது போலவே நாமும் உலகத்திற்காகப் படைக்க பட்டிருக்கிறோம். இந்த உலகம் நமது மகிழ்ச்சிக்காக மட்டுமே படைக்கப்பட்டிருப்பது என்பது மிகக் கொடுமையான கருத்து. அது நம்மைக் கீழிறக்கி விடும்.

இந்த உலகம் நம் பொருட்டு இருப்பது அன்று. ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானோர் இவ்வுலத்திலிருந்து மறைகின்றனர். உலகம் அதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அவர்களுக்குப் பதிலாக இலட்சக்கணக்கானோர் புதியதாகத் தோற்றுவிக்கப் படுகின்றனர். இந்த உலகம் எந்த அளவுக்கு நமக்காக இருக்கின்றதோ அந்த அளவுக்கு நாமும் உலகத்திற்காக இருப்பவர்கள் ஆகிறோம்.

முறையாக நீ செயல்பட வேண்டுமென்றால் பற்றினை முதலில் கைவிடுதல் வேண்டும். இரண்டாவதாக எந்த விவகாரத்திலும் நீ கலந்துகொள்ளாமல் அவற்றுக்கெல்லாம் ஒரு பார்வையாளனாக மட்டும் உன்னை இருத்திக் கொண்டு உனது கடமைகளை ஆற்றிக் கொண்டே இரு!


[Turn over

“ஒரு செவிலித் தாயைப் போல உனது குழந்தைகளைக் கண்காணித்துக் கொண்டிரு” என்று என்னுடைய ஆசிரியர் சொல்வது வழக்கம். செவிலித்தாய் குழந்தையை அனைத்து அதனோடு விளையாடி தன் சொந்தக் குழந்தையைப் போல நடந்து கொள்வாள்! இருப்பினும், அக்குழந்தையை விட்டு அகலுமாறு நீ அவளுக்கு உத்தரவிட்டதும் தன் மூட்டை முடிச்சுக்களோடு வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு அவள் தயாராகிறாள். பற்று என்ற தன்மையோடு உள்ள எல்லாமே மறக்கப்படுகின்றன. ஒருவரது குழந்தைகளை விட்டு மற்றவர்களுடைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது சாதாரண ஒரு செவிலித்தாய்க்குச் சிறிதளவுகூடத் தாங்க முடியாத துயரத்தைத் தராது. நீ உன்னுடையனவாகக் கருதுகின்ற எல்லாவற்றிலும் அதே மனப்பான்மையோடு இருப்பாயாக!

நீ ஒரு செவிலித்தாயைப் போல ஆவாய்! கடவுளிடத்தில் உனக்கு நம்பிக்கை இருக்கும் என்றால் உன்னுடையவை என்று நீ கருதுகின்ற யாவுமே உண்மையில் கடவுளுடையவை ஆகும்.

மிகப்பெரிய பலவீனமானது மிகப்பெரிய நன்மையும் பலமும் போலவே மெல்லமெல்ல புகுந்து விடுகிறது. எவரேனும் என்னைச் சார்ந்திருப்பதாகவும் நான் அவருக்கு நன்மை செய்ய முடியும் என்று கருதிக் கொள்வதும் ஒரு பலவீனமே ஆகும்.

இந்த நம்பிக்கையே மற்ற எல்லாப்பற்றுகளுக்கும் தாய் போல்வதாகும். இந்தப் பற்றுதல் மூலமே நமக்கு எல்லாத் துன்பங்களும் வருகின்றன. இந்த உலகத்தில் யாரும் நம்மைச் சார்ந்து இல்லை. எந்தப் பிச்சைக்காரரும் நமது தர்மத்தை நம்பி இல்லை, எந்த உயிரும் நம் அன்பை நம்பி இல்லை; எவரொருவரும் நம் உதவியின் பேரில் இல்லை என்பனவற்றை நாமே நமது மனத்திற்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இயற்கையினாலேயே எல்லோரும் உதவி பெறுகிறார்கள். உனக்காகவோ எனக்காகவோ இயற்கையின் போக்கு நிற்பதில்லை. இதுவே வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாடமாகும். இதை நாம் முழுமையாகக் கற்றுக் கொள்ளும் போது எப்போதும் கவலையோடு இருப்பதில்லை. அவ்வாறானால் சமுதாயத்தில் எந்த ஓரிடத்திலும் அல்லது எல்லா இடங்களிலும் எந்தவித இடர்ப்பாடும் இல்லாமல் சென்று கலந்து கொள்ள முடியும்.